# காங்கேசன் வரும் கப்பல்களின் பாதுகாப்பை


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 11 இதழ் 137

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27 – 7 – 1995


## ஐ.சி.ஆர்.சி. விலக்கியது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ். குடாவிற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறை துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்கு இதுவரை வழங்கி வந்த பாதுகாப்பை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விலக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

தமது இந்த முடிவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

(5ம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

(கொழும்பு)

யாழ். குடா வரும் உணவுக் கப்பல்களுக்கான பாதுகாப்பை ஐ சி. ஆர். சி நீக்கியதால் யாழ். குடாநாட்டில உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏறபடும் அபாயமிருப்பதாக பி. பி. சி. தெரிவித்தது.

பாதுகாப்பு விலக்கப்பட்டதால் தற்போதைக்கு உணவுக் கப்பல்கள் உடனடியாக யாழ். குடாவிற்கு வரும் சாத்தியமில்லை எனவும் கூறப்படுகிறது.

(-5ம் பக்கம் பார்க்க)

★ அரசியல் தீர்வுத் திட்டம் வெளியாகிறது

# வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டு கூடிய சுயாட்சி அதிகாரமாம்!

## அடுத்துள்ள மாகாணசபையுடன் சிங்களவர் - முஸ்லிம்கள் இணைக்கப்படுவர்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வாக வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்து கூடுமானவரை சுயாட்சி அதிகாரம் கொண்ட அரசியல் தீர்வொன்றை வெளியிட இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாக 'ஏ. பி' செய்தி நேற்று நள்ளிரவு தெரிவித்தது.

[6ம் பக்கம் பார்க்க]

## இராணுவ தளபாடங்கள் வந்து குவிகிறது

(கொழும்பு)

இலங்கை அரசு தொடர்ந்தும் இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்து குவித்து வருவதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இலங்கை படையினரின் ஆட்பலத்தை நம்பமுடியாத நிலையில் அரசு ஆயுத பலத்தை நம்ப வேண்டியுள்ளதால் நவீன ரக யுத்ததளபாடங்களை வாங்கி குவித்து வருவதா

(5ம் பக்கம் பார்க்க)

## 'முன்னேற்றப்பாய்ச்சல்' நடவடிக்கை மேலும் தொடரப்படமாட்டாது

(கொழும்பு)

யாழ். குடாவில் நடாத்தப்பட்ட 'ஒப்பரேஷன் லீப் போவேட்' முடிவடைந்துவிட்டது. அது மேலும் தொடரப்படமாட்டாதென இராணுவப் பேச்சாளர் கேணல்நந்தகொட ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டின் இன்றையநிலை குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

வடக்கில் புதியநடவடிக்கை பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஒப்பரேஷன் லீப்போவேட் முடிவுக்கு வந்துவிட்டது. தற்போதைய நிலைமை குறித்து பாதுகாப்பு உயர்பீடங்கள் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

-சி

## பொலிஸில் இணைய 5000 பேர் வருகை!

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ்சேவையில் சேர்ந்து கொள்வதற்காக 5000க்கும் மேற்பட்டோர் நேற்று நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்தனர்.

விசேட பொலிஸ் அதிரடிப் படை பொலிஸ் கான்ஸ்டபிள் சேவை என்பவற்றில் இவர்களை இணைத்துக்கொள்வதற்காக இத் தேர்வுகள் நடத்தப்பட்டது.

இதேவேளை இராணுவத்திற்கு ஆட்களை சேர்க்கும்பணி விரைவில் நடைபெறுமென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தீ-சி

## நீர்கொழும்புக் கடற்கரையிலிருந்து 17 மர்மச் சடலங்கள் மீட்பு!

(கொழும்பு)

நீர்கொழும்புமோதற கடற்கரையில் 17 சடலங்கள் உருதி தெரியாத நிலையில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சடலங்களின் கால்களும் கைகளும் இறுகக் கட்டப்பட்டிருந்தன. இடுப்பில் கறுப்பு நிற அரை நாண் நாடாவும். தமிழில் பச்சை குத்தப்பட்டுமுள்ளதால் கொல்லப்பட்டவர்கள் தமிழர்களாக இருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இதேவேளை அளவ்வ பகுதியில் வாவி ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட எட்டுச் சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இவற்றில் பல சடலங்கள் அழுகிவிட்டதால் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுவிட்டன.

இதேவேளை உடவளவை

(6ம் பக்கம் பார்க்க)

## ★ க. பொ. த. (உயர்தரம்) யாழ். குடா நாட்டிலும் பரீட்சை நடைபெறும்

(கொழும்பு)

யாழ். குடாவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலும் க பொ த (உயர்தர) பரீட்சை நடைபெறுமென கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

யாழ் குடாவில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் க பொ த (உயர்தர)பரீட்சை எதிர்வரும் 31ம் திகதி ஆரம்பமாகும். முன்பு அறிவிக்கப்பட்டதுபோல் ஒத்திவைக்கப்படமாட்டாதெனவும் திரு. ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## லஞ்சம் வாங்கிய இராணுவ தளபதி பொலிஸாரால் நேற்று கைது

(கொழும்பு)

இராணுவத்தை சேர்ந்த முக்கிய தளபதி ஒருவரை லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டிற்காக நேற்று பொலிசார் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்லப்படும் பொருட்களை தீவிர பரிசோதனையின் பின்பே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் வழக்கத்தையடுத்து தடை செய்யப்பட்ட பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்ல முயன்ற வியாபாரி ஒருவர் படையினரிடம் சிக்கினர்.

வியாபாரியிடமிருந்து ரிவியையும் டெக்கையும் லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு தடைவிதிக்கப்பட்ட பொருட்களை

(6-ம் பக்கம் பார்க்க)

## போதகர் முல்டரை அமெரிக்காவுக்கு அனுப்ப இலங்கை அரசு முயற்சி

(கொழும்பு)

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த அமெரிக்க தேசிய கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த மதகுரு கென்னத் முல்டரை அமெரிக்காவுக்கு அனுப்பும் முயற்சியில் இலங்கையரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த கென்னத் முல்டர் நேற்று குடிவரவு- குடியகல்வு துறையினரிடம் கையளிக்கப்பட்டார்.

இதேவேளை கெனத் முல்ட

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சிகிச்சை நிலையம்

மாவடி - மூளாய் வீதியில் உள்ள லிங்கம் சிகிச்சை நிலையம் வழமைபோல் இயங்கி வருகிறது என்பதனை அறியத் தருகிறோம். சிகிச்சை நேரம்: தினசரி காலை 8மணி - 11 மணி வரை, நிர்வாகி. சி-1568


### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 07 - 27

வியாழன் இரவு

08-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 நோய் தீர்க்கும் மூலிகைகள்
08-20 உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''நன்னீர் மீன் பயன்பாடு'' சித்திரம்
08-30 செய்திகள்
08-40 மொழியும் வாழ்வும்
08-50 எங்களின் தேசம்

1995–07–28

வெள்ளி காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-45 தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–07–27

வியாழன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்
06-00 சிந்தனைக்கு சில வினாடிகள்
06-02 பொன்விளையும் பூமி
06-10 செய்திகள்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 கேள்வி-பதில் - விளையாட்டுத் தொடர்பானவை:
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்:

### இன்று

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆடி அமாவசை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகள் நடைபெறும்: 154

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் கோவிலில் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, வழிபாடுகள் இடம்பெறும் அடியார்கள் ஆடி அமாவாசை பிதிர்கடனும் நிறைவேற்றப்படும்: 154

## யாழ். மாவட்டத்திற்கான 1000ற்கும் மேற்பட்ட தபால் பொதிகள் கொழும்பு தபாலகத்தில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கான ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக 'தினகரன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவற்றில் 700க்கும் மேற்பட்ட பொதிகள் படையினரின் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதும் கடந்த இரண்டரை மாதங்களுக்கு மேலாக கொழும்பு தபாலகத்தில் ஓர் அறையில் பொதிகளாககட்டி போடப்பட்ட நிலையிலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்துக்கான கப்பல் போக்குவரத்துசேவையில் ஏற்பட்டுள்ள பிரச்னையாலேயே இவை கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் உணவுப்பொருட்களை ஏற்றிவரும் கப்பல்களில் இத்தபால்பொதிகளை அனுப்ப பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்காமல் போனதும் குறிப்பிடத்தக்கது. -சி

## படை முகாம்கள் குறைப்பால் திருமலைகடற்படை தளத்திற்கு ஆபத்து

(கொழும்பு)

கிழக்கில் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டு வருவதால் திருமலை கடற்படைத் தளத்திக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்புகள் அதிகரித்து வருவதாக இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் காட்டுப் பகுதியில் சிறிய முகாம்கள் மூடப்பட்டு வருவதால் புலிகள் உடனடியாகவே அப் பகுதிக்குள் நுழைந்துவிடுகிறார்கள். இதனால் அவர்கள் திருமலைக் கடற்படைத் தளத்திற்கு அருகில் வரக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனால் திருமலை கடற்படைத் தளம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

தற்போது திருமலை கடற்படைத் தளத்திற்கு அண்டிய பகுதிகளில் குறைந்தளவு படைமுகாம்களே உள்ளன. இவற்றை விடுதலைப் புலிகள் இலகுவாக தாக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் கூறியுள்ளனர்.

அண்மையில் இப் பகுதியூடாக வந்த விடுதலைப் புலிகள் 'ரணசுறு' 'சூரயாவை' தகர்த்ததும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. -சி

## தோல்விகள் குறித்து ஆராய படைத் தளபதிகள் பலாலி வந்தனர்

(கொழும்பு)

ஒப்பரேஷன் லீப் போவேட் தோல்வியை அடுத்து இராணுவ விமானப்படை, கடற்படைத் தளபதிகள் பலாலி இராணுவ தளத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வியால் அவர்கள் பின் வாங்கிச் சென்றதை விசாரிக்க இராணுவ தளபதி ஜெரி டி சில்வாவும்

புக்காரா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை மற்றும் இருஹெலிகள் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்கானது குறித்து அறிய விமானப்படைத் தளபதி ஏயர் வைஸ் மாஷல் ஒலிவர் ரணசிங்காவும்

'எடித்தரா' கட்டளைக் கப்பல் கடற்புலிகளால் தகர்த்தழிக்கப்பட்டதுடன் அங்கு பெரும் தாக்குதலை கடற்புலிகள் நடாத்தியது குறித்து உடன் விசாரணை நடாத்த கடற்படை தளபதி வைஷ் அட்மிரல் மோகான் சமரசேகராவும் பலாலிக்கு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தத்தமது படைப்பிரிவுகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்து இவர்கள் விசாரணைகளை நடாத்தி வருகிறார்களாம். -சி

## நீர்க்குழாய் திருட்டு

(சாவகச்சேரி)

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் பொருத்தப்பட்டிருந்த நீர்க்குழாய் திருட்டுப் போயுள்ளது

பிரதானவீதியின் மறு கரையிலிருந்து வீதிக்கு குறுக்காகப் போடப்பட்டிருந்த நீர் குழாயே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. இதனால் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் குடிநீருக்குக் பெரும் கஸ்டம் ஏற்பட்டுள்ளது.

155-சி

## சந்திரிகாவின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா தனது நடமாட்டத்தை பெருமளவு கட்டுப்படுத்தியுள்ளார். பாதுகாப்பு காரணங்களுக்காகவே அவரது நடமாட்டம் குறைக்கப்பட்டுள்ளது.

அவர் பொதுமக்கள் முன் தோன்றுதலும் பெருமளவில் குறைந்துள்ளது. மிகமுக்கியமான வைபவங்களைத் தவிர ஏனைய நிகழ்வுகளில் பங்கு பற்ற வேண்டாமென புலனாய்வுத்துறையினர் சந்திரிகாவுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அவர் பங்கு பற்றும் வைபவங்கள் பற்றிய அறிவிப்புகள் பத்திரிகைகளில் வெளிவருவதில்லை. மேலும் குறித்த சில மணி நேரங்களுக்கு முன்பே அவர் கலந்துகொள்ளும் வைபவங்கள் பற்றி அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பாதுகாப்பு தகவல்களை உடனுக்குடன் வழங்குவதற்காக அலரி மாளிகையில் பிரிகேடியர்சரத் முனசிங்க தலைமையில் இராணுவ தகவல் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (சி)

## கொழும்பிலும், கிழக்கிலும் கடந்த 3 வாரங்களில் பல தமிழரை காணவில்லை!

[கொழும்பு)

கொழும்பிலும் வடக்கு-கிழக்கு பகுதியிலும் கடந்த மூன்று வாரங்களில் பெருமளவு தமிழ் இளைஞர்கள் காணாமல் போவது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது-

காணாமல் போனவர்கள் அனைவரும் 21 வயது முதல் 28 வயதுதானவர்கள் எனவும் கொழும்பிலிருந்து ஐவரும், திருமலையிலிருந்து நால்வரும் மட்டக்களப்பிலிருந்து மூவரும் வவுனியாவிலிருந்து ஒருவரும் காணாமல் போயுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபைக்கு புகார் செய்யப்பட்டுள்ளது-

இவர்கள் கடத்தப்பட்டு விசாரணைகளின் பின்கொல்லப்பட்டு இவர்களது சடலங்கள் அழிக்கப்பட்டிருக்கலாமென மன்னிப்புச்சபை அச்சம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 19 ம் திகதியின் பின் கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து மன்னிப்புச் சபை பலத்த கண்டனமும் தெரிவித்துள்ளது. (சி)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

எமது குடும்பத் தலைவர் அமரர் சி. அருளானந்தம் அவர்களின் 31ம் நாள் நினைவையொட்டிய வீட்டுக்கிருத்திய மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை 28-7-95ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
அ, தவபதியம்மா
(மனைவி)

சம்பரவளவு,
நீர்வேலி, வடக்கு,
நீர்வேலி.

(எ- 5142)



UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

ANNUAL EXTERNAL EXAMINATIONS-1994

Examination Entry forms will be received from suitable registered candidates, who wish to sit for the following Examinations scheduled to commence in October - December 1995.

FIRST IN ARTS
FIRST IN COMMERCE
BACHELOR OF ARTS (GENERAL) PART-I
BACHELOR OF ARTS (SPECIAL) PART-I
BACHELOR OF COMMERCE PART-I
BACHELOR OF ARTS (GENERAL) PART-II
BACHCLOR OF ARTS (SPECIAL) PART II
BACHELOR OF COMMERCE PART-II
BACHELOR OF ARTS (SPECIAL) PART III
BACHELOR OF COMMERCE PART III

Examination Entry forms could be obtained from the External Registration & Examinations Unit, University of Jaffna in person or by post from July 25, 1995.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Manager of the People's Bank located in the University of Jaffna for the payment of Rs. 15/-. Those who wish to obtain the forms by post are required to send a money order / postal order for Rs. 15/- drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs. 12/50

Completed Examination Entry forms should be submitted to the External Registration & Examinations Unit on or before August 15, 1995.

Those who failed the First in Arts / First in Commerce Examination in given 3 attempts may be allowed to sit the Examination with the approval of the Senate.

Further information could be obtained from the above unit.

**Registrar**

External Registration & Examinations unit.
July 21, 1995.

[A 5149]

**மணிவாக்கு**

குழந்தாய்! நான் வேண்டுவது என்ன தெரியுமா? பயம் என்பதையே அறியாத இரும்பிலான உள்ளமும் இதயமுமே. — சுவாமி விவேகானந்தர்.

## நமது நோக்கு

# தமிழீழ முதலீடு

வடக்கில் தற்போது ''புலிப்பாய்ச்சல்'' நடவடிக்கை காரணமாக எழுந்துள்ள யுத்த நிலையைக் கருத்தில் கொண்டு மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளைச் சேர்ந்த இரு தூதுவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து ஆலோசனை கூறியுள்ளனர். அதற்கு சந்திரிகா தனது இயல்பான அகங்காரத்துடன் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக தோல்வியடையச் செய்தபின்னரே அடுத்த பேச்சுக்கள் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளார்.

சந்திரிகாவுக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாண்பதற்கு விருப்பம் இல்லை. ஆரம்பத்தில் சிங்கள மக்கள் தங்கள் பிள்ளைகள் வடக்கிலும், கிழக்கிலும் வீணாகக் கொல்லப்படுகின்றனரே என்ற பயம் காரணமாக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்; போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று சந்திரிகாவுக்கு வாக்களித்தனர். ஆனால் இப்போது அவர்கள் உள்ளங்களில் இயல்பாகவே வேரூன்றியிருந்த பௌத்த சிங்களப் பேரினவாதத்தை சந்திரிகாவும் மாமன் ரத்வத்தையும் தட்டி எழுப்பியுள்ளார்கள். அவர்களும் தங்கள் எதிர்கால அபிவிருத்திகளைக்கூட எண்ணாது இராணுவத் தீர்வை விரும்புகிறார்போல் தோன்றுகிறது. இது வடக்கில் போர் முடியும் வரை அரசுக்கு நெருக்கடி கொடுக்கப் போவதில்லை என்று ஐ. தே. கட்சியினரும் தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் கூறுவதிலிருந்து விளங்குகிறது.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல வேண்டுமென்று சிங்களத் தேசம் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறது அப்படி இருக்கும் இவ்வேளையில் தமிழ் மக்களாகிய நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம். விடுதலைப் புலிகள் போராடட்டும்; நாங்கள் அவர்கள் ஈட்டும் வெற்றியில் குளிர்காயலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கலாமா?

சிங்கள இளைஞர்களும், ஏன் புத்த பிக்குகள் கூட சிங்களப் படையில் தமிழர்களுக்கு எதிராக அணி திரள்கிறார்கள். யுத்தத்துக்கு தேவையான பணத்தை மக்கள் கோடிக்கணக்கில் நன்கொடையாக வழங்குகிறார்கள்.

தமிழீழ மண்ணை மீட்பதற்கு ஆட்பலம் தேவை. பணப் பலமும் தேவை. இதைச் சிங்களவர்களா தரப் போகிறார்கள்? தமிழர்களாகிய நாங்களே இவ்விரு பலத்தையும் விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டும். இதில் யோசிப்பதற்கு இடமே இல்லை. வாழாதிருந்து எதிரியின் கையால் அழிவதைவிட விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து எதிரியை அழித்தேயாக வேண்டும்.

யுத்தம் நடத்துவதற்குப் பணம் முக்கியம். மரத்திலிருந்து பணத்தைப் பிடுங்கமுடியாது தேவையான பணத்தை விடுதலைப் புலிகளுக்கு நாம் தான் வழங்கவேண்டும். எதிரியானவன் எம்மைத் தாக்கும்போது நாம் சேர்த்து வைத்த பொருட்களை எல்லாம் விட்டுவிட்டுத்தானே ஓடுகிறோம். எமது சொத்துக்களை விட்டுவிட்டு ஓடாத நிலைமையை உருவாக்க வேண்டுமென்றால் நாம் விடுதலைப் புலிகளுக்கு யுத்த தளபாடங்களை பெறுவதற்கும் பராமரிப்புகளுக்கும் தேவையான பணத்தை அவர்களுக்கு வழங்கியேயாக வேண்டும்.

நாம் வழங்கும் பணம் விரயமான செலவுகளுக்குச் செல்லவில்லை. அது ஒரு முதலீடு. தமிழீழத்தை அடைவதற்கு நாம் செலவு செய்யும் பணம் முதலீடுதான், சிங்களவர்கள் யுத்தத்துக்கு செலவிடும் பணம் வீண் விரயம். அவர்களின் அபிவிருத்திகளை பாதிப்பது. நாம் யுத்தத்துக்கு செலவு செய்யும் பணம் தமிழீழத்தை கட்டி எழுப்பும்.

சிங்களவர்கள் யுத்தத்துக்கு வீணே செலவு செய்து பொருளாதாரச் சீரழிவுக்கு ஆளாகியுள்ளனர். இம்மாதம் முதல் அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு அவர்களுக்குரிய அலவன்சுகள் வழங்கப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது. இதிலிருந்து சிங்களவர்களின் பொருளாதாரம் எந்தளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

## இலவச வைத்தியசாலை

(கொழும்புத்துறை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் வட்டுக்கோட்டை சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலை பிரதி திங்கள் புதன் வெள்ளி ஆகிய தினங்களில் செயல்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

194-சி

## ★ ஒப்பரேஷன் லீப்போவேட்டில்

# 9000 சிறியரக ஆயுதங்களை படையினர் பயன்படுத்தினர்

[கொழும்பு]

'முன்னேற்றப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையில் ஒன்பதாயிரம் சிறிய ரக ஆயுதங்களும் 900 பெரிய இயந்திரத் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பலஆயிரக்கணக்கான ஷெல்கள் வீசப்பட்டபோதும் அதன் எண்ணிக்கை குறித்த சரியான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் எண்ணாயிரம் வரையான ஷெல்கள் வீசப்பட்டதாகவும் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இத்தாக்குதலில் இரு சுப்பசொனிக், நான்கு எம்.ஐ 17 ரக ஹெலிக்கொப்டர்கள், இரு அவ்ரோக்கள், 3 பொம்மர்கள், நான்கு புக்காராக்களும் ஈடுபடுத்தப்பட்டதாகவும், கடற்படையைச் சேர்ந்த பல தரையிறங்கு கப்பல்களும், பீரங்கிப் படகுகளும் இத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை டாங்கிப்படைப் பிரிவைச் சேர்ந்த 30 டாங்கிகளும் புல்டோசர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன இதில் ஒரு புல்டோசர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அழிக்கப்பட்டதும் தெரிந்ததே. -சி

# முன்னேறி வந்த வழிகளினூடாகவே படையினர் பின்வாங்கிச் சென்றனர்

[கொழும்பு]

'முன்னேற்ற பாய்ச்சல்' நடவடிக்கை மூலம் படையினர் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளின் 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கையால் பின்வாங்கி ஓடியசம்பவங்களை கொழும்பு பத்திரிகைகளின் பாதுகாப்புச் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

படையினர் எவ்வாறு மும்முனைகளில் முன்னேறி வந்தனரோ அதே வழியே பின்வாங்கி ஓடியுள்ளனர் அராலியில் தரித்துநின்ற பிரிகேடியர் எகலகொட தலைமையிலான 28-வது படைப் பிரிவு முதலில் வட்டுக்கோட்டைக்குப் பின்வாங்கிச் சென்று பின் அங்கிருந்து பொன்னாலைக்கு பின்வாங்கினர்.

கேணல் கிரான் ஹெலன் கொட தலைமையிலான வான் வழி நகர்வுப் படைப் பிரிவு அளவெட்டிப் பகுதியூடாகவும் பொறியியல் படைப் பிரிவு மாதகல் ஊடாகவும் பின்வாங்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்றே மூளாய் பகுதியில்நின்ற படைப்பிரிவும் பொன்னாலைக்குப் பின்வாங்கிச் சென்று அங்கிருந்து காரைநகருக்குள் புகுந்துகொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. -சி

# 'எடித்தரா' அகற்றப்படாததால் காங்கேசனில் கப்பல் சேவை பாதிப்பு

[கொழும்பு]

விடுதலைப்புலிகளினால் தகர்த்தழிக்கப்பட்ட 'எடித்தரா' அப்பகுதியிலிருந்து அகற்றப்படமுடியாதிருப்பதால் காங்கேசன் துறைமுகத்தினுள் ஏனைய கப்பல்கள் சென்றுவர முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதிக்கு வந்த 'ஓசன் கரியர்' என்ற சரக்குக் கப்பல் பலத்த பிரயத்தனங்களின் மத்தியிலேயே துறைமுகத்தினுள் நுழைந்துள்ளது.

இதேவேளை 'எடித்தரா' கட்டளைக் கப்பல் மூழ்கடிப்புக் குறித்து விசாரணை நடாத்த கடற்படை அதிகாரிகள் குழுவொன்று காங்கேசன் கடற்படைத் தளத்திற்கு வந்துள்ளது.

கொமடோர் எல் மெண்டிஸ் தலைமையிலான குழுவே இந்த விசாரணையை மேற்கொண்டு வருகிறது. 'எடித்தரா' விடுதலைப்புலிகளால் தாக்கப்படக் கூடியதாயிருந்த காரணிகள் பற்றி இக்குழு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. -சி

# இம்மாதம் மட்டும் மட்டுநகரில் 15 படை முகாம்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இம்மாதம் மட்டும் 15 இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

பெரிய, சிறிய இராணுவ முகாம்களே இவ்வாறு மூடப்பட்டுள்ளன. வாகரை மற்றும் மட்டக்களப்பின் மேற்கு பகுதிகள் யாவும் தற்போது புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

மட்டக்களப்பு நகர் மற்றும் அதற்கு அண்மையிலுள்ள பகுதிகள் மட்டுமே இராணுவத்தினரின் வசமிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வவுணதீவு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள வவுணதீவு முகாமும் மூடப்படலாமென தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு முழுவதும் பரந்திருந்த படையினர் தற்போது அங்கு மிகக்குறுகிய இடங்களிலேயே உள்ளனர். இராணுவத்தினர் தாம் வெளியேறும் பகுதிகளில் பொருளாதாரத் தடைகளையும் விதித்து வருகின்றனர். இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் உணவு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் - சி

## பலதும் பத்தும்

### கனடாவில்...!?

''கனடா வரவேற்கிறது'' (Welcome to Canada) என்ற திரைப்படத்தை 1986ல் உலகப் புகழ்பெற்ற ஜோன்சிமித் தயாரித்தார். அப்படம்: பல திரைப்பட விழாக்களிற் பரிசுபெற்றது.

அதன் கதை என்ன தெரியுமோ? 1983க் கலவரத்தைத் தொடர்ந்து அநாதைகளாகிவிட்ட இலங்கைத் தமிழர்கள் கப்பல் ஒன்றில் சென்ற கதை தான்!

இன்று... அப்படிச் சென்றவர்களிற் சிலர்...... தாய் மண்ணை மறந்து...... தேவையற்ற சிறு சச்சரவுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்துவதாகச் செய்திகள் வருகின்றன. அவற்றைப் படமாக்கினால்......? பரிசு கெடுத்து விடுமாம். தமிழ்ப் பண்பாட்டிற்கு!

— மயூரன்

## செப். 16ம் திகதி

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 1995ம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா செப்டெம்பர் மாதம் 16ம் திகதி சனிக்கிழமை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து செப்டெம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் அக்கடமியால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். செப்டெம்பர் 19ம் திகதி லேடிலீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரையும், 21ந் திகதி வியாழக்கிழமை சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரையும் இடம்பெறும்.

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டதும் தெரிந்ததே.

162-சி

## கல்விக்கழக ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் கல்விக் கோட்ட கல்விக்கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

# புத்தளம் முஸ்லிம்களின் பாதுகாப்பை பலப்படுத்துக

(கொழும்பு)
புத்தளம் பகுதியில் முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசு பலப்படுத்த வேண்டுமென ஐ. தே. க. எம். பியான ஜனுப் அஸ்வர் அரசை கேட்டுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாலேயே இவர்களுக்கு அரசு உடனடியாக தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டுமென அவர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புத்தளம் பகுதியில் இராணுவ நிலைகள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் அப்பகுதியில் உள்ள சிங்களவர் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாம். -சி

# வயிற்றினுள் கடத்திவந்த போதைபொருள்வெடித்தது

(கொழும்பு)
போதைப் பொருட்களை விழுங்கி வயிற்றினுள் கடத்தி வந்த பாகிஸ்தான் வாசி ஒருவர் அப்போதைப் பொருட்கள் வயிற்றினுள் வெடித்ததால் மரணமானார்.

பாகிஸ்தானிலிருந்து கொழும்பு வந்த இவர் போதைப்பொருட்களை சிறு சிறு பொதிகளாக பொலித்தீன் பைகளில் கட்டி விழுங்கி வயிற்றுள் அவற்றை கொண்டு வந்துள்ளார்.

எனினும் அவை வயிற்றுள் வெடித்து விடவே போதைப்பொருட்கள் இரத்தத்துடன் கலந்து அவர் மரணமானார். தற்போது இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக கொழும்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாம்.

இவரது வயிற்றை வெட்டித் திறந்த வைத்தியர்கள் வயிற்றினுள் இருந்து வெடிக்காத நிலையில் பொதிகளாக கட்டப்பட்டிருந்த போதைப் பொருட்களை மீட்டுள்ளனர். -சி

# விவசாயக் கூட்டுறவுச் சமாசத்தில் பெரும் நிதிப்பற்றுக்குறை

## தனியாரிடம் கடன் வாங்க முடிவு

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரினூடாக கொழும்பில் உள்ள தனியார் நிறுவனங்களிடம் கடனடிப்படையில் நிதியை பெறவுள்ளது.

இந்த கடனுதவியை வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் சிபார்சுடனே மேற்படி சமாசம் தனியார் நிறுவனங்களிடம் கோரியுள்ளது.

கொழும்பில் உள்ள உரக் கூட்டுத்தாபனம், லிவர் பிறதர்ஸ், அசோட்டட் இறப்பர் இன்டஸ்றிஸ், இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சம்மேளனம், அகில இலங்கை தென்னை உற்பத்தி சமாசம், லங்கா மில்க் பூட் நிறுவனம் போன்ற தனியார் நிறுவனங்களிடமே சமாசம் கடனுதவியை கோரியுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தில் நிதிக்கு பெரும் பற்றுக்குறை ஏற்பட்ட காரணத்தால் இப் பற்றுக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாகவே கொழும்பில் உள்ள தனியார் நிறுவனங்களிடம் இக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. 170-சி

# தாயின்சேலையில்சுருக்கிட்டு தனயன் தற்கொலை

(கொழும்பு)
போதைப் பொருள் வாங்குதவற்காக தாய் பணம் தர மறுத்ததால் தனயன் அவரது சேலையில் தூக்குப் போட்டு தற்கொலை செய்த சம்பவம் நேற்று முன்தினம் தென்பகுதியில் இடம்பெற்றுள்ளது

போதைப்பொருள் வாங்குவதற்கு பணம் தருமாறு கோரிய மகனின் வற்புறுத்தலை தாங்கமுடியாத தாயார் மகனுக்கு புத்திமதி கூறி இந்தப் பழக்கத்தை கைவிடுமாறு வற்புறுத்தியுள்ளார்.

தயார் பணம் தர மறுத்ததால் ஆத்திரமுற்ற மகன் வீட்டினுள் தாயாரின் சேலையை எடுத்து கூரையில் கட்டி அதில் சுருக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். -சி

# கலைத் திறன் போட்டி சித்திவிநாயகர் வித்தியாலயம் முதலிடம் பெற்றது

(நெல்லியடி)
யாழ்.கல்வித்திணைக்கள வலயம் 2ன் தமிழ்மொழி கலைத்திறன் போட்டி அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவிகள் குழு நடனத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இம்மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் இப்பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் குழு நடனத்தில் வெற்றியீட்டிய ஆறு மாணவிகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கியுள்ளனர். 160-சி

# உணவுப் பொருட்கள் திருடியதாக ஒருவர் கைது

(பண்டத்தரிப்பு)
இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற பகுதி ஒன்றிலுள்ள கூட்டுறவுச்சங்க கடையை உடைத்து அதிலிருந்த உணவுப்பொருட்களை திருடிச் சென்றதாக குற்றச் சாட்டில் சந்தேக நபர் ஒருவரை சங்கானைக்காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தொல்புரம் கிழக்கு (கிளை இலக்கம் -15) அண்மையில் உடைக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான உலர் உணவுப்பொருட்கள் திருடப்பட்டிருந்தது.

இதுபற்றி சங்கானைக்காவல் துறை அலுவலகத்தில் சங்க நிர்வாகம் செய்த முறைப்பாட்டை அடுத்து புலன் விசாரணையில் ஈடுபட்ட காவல் துறையினர் மேற்படி நபரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். -72

# காஷ்மீர் தீவிரவாதிகளுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பாம்

(சென்னை)
ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதிகள், ஆந்திரா நக்ஸலைட்டுகளுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதாக இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் திரு. மோகித் சென் சென்னையில் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஆரம்பமான இக்கட்சியின் 2வது மாநில மாநாட்டில் உரையாற்றிய அவர், ஜம்மு தீவிரவாதிகள் ஆந்திரா நக்ஸலைட்டுகளுடன் விடுதலைப் புலிகள் ஒன்றிணைந்து, இந்தியத் தேசிய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய காங்கிரஸின் மூத்த தலைவரான திரு ஜி. கே. மூப்பனார் குறிப்பிடுகையில், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிக மோசமாக மீறப்பட்டு வருகிறது. இவற்றைப் பாதுகாக்க, மாநில அரசு உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். சி

# பாரிஸ் ரயில் குண்டுவெடிப்பு நால்வர் உயிரிழப்பு

(பாரிஷ்)
பிரான்ஸ் தலைநகர் பாரிசில் புகையிரத வண்டியொன்றில் குண்டு வெடித்ததில் மூன்று பெண்கள் உட்பட நான்குபேர் உயிரிழந்தனர். 60 பேர் காயமுற்றனர். காயமுற்ற 10 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாரிசில் சென் மைக்கல் சுரங்கபாதை புகையிரத நிலையத்தில் மாலை 5. 30 மணியளவிலே இக்குண்டு வெடித்தது.

ஓர் இருக்கைக்கு கீழே இக் குண்டு வைக்கப்பட்டிருந்தது. இக் குண்டில் 3கிலோ முதல் 4கிலோ வரையில் வெடிப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.

இதுவரை இக்குண்டு வெடிப்பிற்கு யாரும் உரிமை கோரவில்லை.

இதைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் பிரான்ஸ் உள்துறை அமைச்சரினால் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு பாரிசில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து இது தான் முதல்தடவையாக வெடித்த குண்டு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ர-சி

## சேர்பியரின் தாக்குதலால்

# ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் காடுகளுக்குள் தப்பியோட்டம்

(சரஜேவோ)
பொஸ்னிய சேர்பியர்களின் ஆக்கிரமிப்பில் இருந்த செபா நகரிலிருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளம் பெண்களும், சிறுவர், சிறுமியரும் அருகிலுள்ள காடுகளினுள் தஞ்சம் அடைந்துள்ளனர்

சேர்பியரின் கடும் தாக்குதல்களினால், கடந்த 3 நாட்களில் மட்டும் 300க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் படுகாயம் அடைந்து, ஐ. நா படையினரால் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை சேர்பியப் படைகள் முஸ்லிம்களின் ஆட்சியில் இருந்த பிஹாத் நகரை நேற்று முன்தினம் மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். சேர்பியப் படைகள் முஸ்லிம் படைகள் அமைத்திருந்த பாதுகாப்பு வலயங்களையும் ஊடுருவிச் சென்றுள்ளனர்.

அப்பகுதியில் இருந்த முஸ்லிம் கிராமம் ஒன்றினுள்ளும் சேர்பியப் படைகள் ஊடுருவித் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இத்தாக்குதல்களினால் 50க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சி

# பாகிஸ்தானுக்கு ராணுவ சாதனங்களை வழங்க அமெரிக்கா முடிவு

(புதுடில்லி)
அமெரிக்கா பிரெஸ்லர் திருத்தச் சட்டத்தைத் தளர்த்திப் பாகிஸ்தானுக்கு மேலதிக இராணுவச் சாதனங்களை வழங்கப்போவது பற்றி இந்திய எம். பி.க்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் இந்தியாவின் பாதுகாப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்கத் தலைவர்களின் பேச்சைக் கேட்டு, அக்னி, பிருதுவி மற்றும் ஏவுகணைகளை உள்நாட்டிலேயே உருவாக்காமல் விடக்கூடாது என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்

இந்தியாவில் பெருகிவரும் பயங்கரவாத நடவடிக்கையில் பாகிஸ்தானின் நேரடி ஈடுபாடு இருப்பதை அமெரிக்கா புரிந்து கொள்ளவேண்டும் என்றும் உறுப்பினர்கள் கூறினர்கள்.

இதேவேளை இந்தியாவின் பாதுகாப்புப் பிரச்சினையிலோ, அடிப்படைக் கொள்கையிலோ பாதிக்கக்கூடிய விடயத்தில் அரசு விட்டுக்கொடுக்காது எனப் பாதுகாப்பு அமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி தமது அமைச்சகத்துக்கான எம். பி.க்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். ர-சி

## வாரி வழங்கி வீரரைப்பெருக்குவோம்

மானம் அழிந்தபின் வாழுதல் தகுமோ
மண்ணை இழந்து நாம் அடிமைகள் ஆவதோ
ஈனப் பிறவியாய் இரந்துண்ணப் போகிறோமோ
உள்ள பொருளெல்லாம் வாரி வழங்குவீர்

எதிரியெம் சொத்தெல்லாம் கவர்ந்திட விடுவமோ
எங்களை அழித்திடும் அவன்செயல் பொறுப்பமோ
உதிரியாய் கைகட்டி சேவகம் செய்வமோ
தானையி லிணைந்துநாம் சங்காரம் செய்குவோம்

நாடு எழுந்திங்கு நிமிர்ந்து நிற்குது
நலனுற வளர்ப்பது கடனெனச் சொல்லுது
கேடுற வரும்படை தகர்த்தொரு சுதந்திர
நாட்டினைப் படைத்திடும் வீரரைப் பெருக்குவோம்

உயிரினும் மேலான தாயகம் மீட்டிட
உரிமைகள் யாவையும் வென்று நாம் எடுத்திட
அயரா துழைத்திடும் வேங்கைகள் பலம்பெற
பொருளுடை வள்ளல்காள்! அள்ளி வழங்குவீர்

'மாரீசன்'

# மர்மக் கொலைகளின் சூத்திரதாரி முன்னுள் இராணுவ 'அதிகாரியாம்

(கொழும்பு)

பொல்கொட, அளவ்வ ஆறுகளில் போடப்படும் சடலங்களின் கொலைக்கு இராணுவத்திலிருந்து ஒய்வுபெற்ற ஒரு அதிகாரியின தலைமையில் இயங்கி வரும் இராணுவக் குழுவொன்றே காரணம் என 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரின் தலைமையில்இயங்கும் குழுவே பொல்கொட, அளவ்வ ஆறுகளில் மிதந்த சடலங்களின் கொலைக்கு காரணமாகும். இந்தத் தகவல் தற்போது மேற்படி கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

இராணுவத்துக்குள் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்த முனைந்து தற்போது இராணுவத்திலிருந்து ஒய்வுபெற்றுள்ள இராணுவ அதிகாரியும், சில இராணுவத்தினரும் இணைந்தே இக் கொலைத் செய்துள்ளதாவும் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் 'யுக்திய' தெரிவித்துள்ளது.

இதேவேளை நான்கு சடலங்களை தவிர ஏனைய 32 சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லையாம். -சி

# கொழும்பில் 50 இடங்களைத் தாக்க புலிகள் திட்டமாம்

(கொழும்பு)

கொழும்பில் ஐம்பது முக்கிய இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்களை நிகழ்த்த புலிகள் திட்டமிட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கென ஐம்பதிற்கும் மேற்பட்ட புலிகள் கடந்தசில மாதங்களுக்கு முன்பே கொழும்பிற்குள் ஊடுருவிவிட்டதாகவும் இவர்கள் தமக்கு வழங்கப்படும் உத்தரவுகளுக்கேற்ப முக்கிய பகுதிகளை தாக்க முயற்சித்து வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இவர்களில் சிலர் பொலிஸாரினல் கைதுசெய்யப்பட்டபோது இத்தகவல்கள் கிடைத்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர் இதையடுத்து புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாமெனக்கருதப்படும் இடங்களின் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது புலிகளின் உறுப்பினர்களை படையினர் தீவிரமாக தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# படையினர் இருந்த முகாம்களில் கிழக்கில் புலிகள் இருக்கின்றனர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் முன்னர் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பல முகாம்களில் தற்போது விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலி ஒயா, ஏறுவூர், களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, தளவாய், விஜயபுர, பேத்தாளை, வவுணதீவு ஆகிய படை முகாம்கள் மூடப்பட்டதால் தற்போது அங்கு விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ளனர். இங்கு பெருமளவு விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிழக்கில் விடுதலைப் புலிகள் இராணுவம், விசேட அதிரடிப் படை, பொலிஸ் நிலையங்கள் மீதும் ரோந்துப் படையணிகள் மீதும் தீவிர தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனராம். இவ்வாறான தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் ஈடுபடுவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இத் தாக்குதல்கள் படையினருக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் 6 கிளைகளில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

முன்னேறிப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப் பகுதியில் சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆறு கிளைகள் உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன. என்று சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. வி. செந்தில்நாதன் இது பற்றி தெரிவித்தார்.

சங்கத்தின் மூளாயிலுள்ள 11ம் இலக்க கிளை, வட்டுக்கோட்டையிலுள்ள 21ம் இலக்க கிளை, அராலி தெற்கு கிழக்கு 24ம் இலக்க கிளை, துணைவி 28ம் இலக்க கிளை சங்கரத்தை 29ம் இலக்க கிளை, தொல்புரம் கிழக்கு 15ம் இலக்ககிளை ஆகியனவே இவ்வாறு உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும்தெரிவித்தார்.

இத்திருட்டு சம்பவங்கள் குறித்து சங்கானை காவல்துறை பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -72

# அமெரிக்க போர்த் தளபாடங்களை பெற இலங்கை தீவிர முயற்சி

(கொழும்பு)

அமெரிக்காவிடமிருந்து விமான மற்றும் கடற்படைக்கு கப்பல்களை கொள்வனவு செய்வது குறித்து இலங்கை - அமெரிக்க அதிகாரிகளிடையே தற்போது பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு இராணுவ தளபாட உதவிகள் வழங்குவதற்கு முன்னர் மறுப்பு தெரிவித்து வந்த அமெரிக்கா தற்போது தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளதாக இலங்கை தரப்பில தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் படையினரை பெருமளவு நகர்த்து வதற்கு தேவையான பாஜ்களையும், தரையிறங்கும் கலங்களையும், விமானங்களையும் கொள்வனவு செய்வது குறித்து இரு நாட்டு அரசு அதிகாரிகள் மத்தியிலும் பேச்சுக்கள் நடைபெற்றுவருகிறது.

இதேவேளை இலங்கை படை அதிகாரிகளுக்கு நவீன போர் பயிற்சிகளை வழங்கவும் அமெரிக்கா முன்வந்துள்ளதும் தெரிந்ததே. சி

## போதகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரின் வழக்கு விவகாரத்தில் இலங்கை அரசு சர்வதேச பொலிசாரின் உதவியை நாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -க-சி

## உணவுப்

(1ம் பக்கத் தொடர்சி)

இவ்விடயத்தில் அரசு-சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் சுமுகமானதொரு உடன்பாட்டிற்கு வந்து தொடர்ந்தும் கப்பல் சேவை நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. -சி

# ஏவுகணையை பயன்படுத்தாதீரென அமெரிக்கா புலிகளுக்கு கூறியதாம்!

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துடன் யுத்தத்தின்போது. விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பாவிக்ககூடாது, என்று விடுதலைப்புலிகளுக்கு, அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளதாக கொழும்பில் வெளியாகும் தமிழ்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

அமெரிக்க அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு மேற்படிக் கோரிக்கையை விடுத்திருப்பதாக இந்திய உளவுப்பிரிவுச் செயலாளர் ''ரோ''வை மேற்கோள் காட்டி தெரிவித்திருப்பதாக, பெயர்குறிப்பிட விரும்பாத இலங்கை அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் மேற்படி பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளாராம்.

இலங்கை இராணுவத்துடனை யுத்தத்தில், விமான எதிர்ப்பு ஏவுகணைகளை இனிமேல் பாவிக்க வேண்டாமென்று விடுதலைப் புலிகளுக்கு அதன் வெளிநாட்டுப் பேச்சாளர் திரு. லோரன்ஸ் திலகர் ஊடாக, அமெரிக்கா இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதாக இந்திய ''ரோ'' உளவுப் பிரிவு தகவல் தெரிவித்துள்ளதாக. அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளாராம். வி- சி

## இராசி பலன்

27-07-1995

(தமிழுக்கு ஆடி-11)

வியாழக்கிழமை

அமாவாசை மு. இ: 9-19 வரை புனர்பூசம் மு ப: 3-12 வரை அமிர்தயோகம், ஆடி அமாவாசை விரதம், இராகு காலம் பி ப: 1-32முதல் 3-02 வரை; சுபவேளை காலை 7-32 முதல் 9 02 வரை.

மேடம்: மனஅமைதி குன்றல் யோசனை அலைச்சல்.

இடபம்: அந்தஸ்து கலைத்துறை ஈடுபாடு, பணவரவு.

மிதுனம்: தொழில் நஷ்டம், குடும்பபிரிவு, வேதனை.

கடகம்; எதிர்பாராததிருப்பம், கடன்வரவு, பயணம்.

சிங்கம்: பணியாள்தொல்லை வேலைப்பழு, துன்பம்

கன்னி: காரியசித்தி, நண்பர் சகாயம், பெருமை.

துலாம்: வினோத சிந்தனை, வாக்குவன்மை, ஆன்மீகபலம்

விருச்சிகம்: மேலதிகாரிகள் கண்டிப்பு, வீண்விரயம், தவறிழைத்தல்.

தனுசு: மனச்சுமை, வீண் பிரளயம், அன்னியப்படல்

மகரம்: சுபச்செய்தி, குடும் சுபீட்சம், தொழில்லாபம்

கும்பம்: தெய்வீகப்பணி, காரியசித்தி, மதிப்புயர்வு

மீனம்: அன்னியப்படல், குதர்க்கவாதம், மனம்நோதல்

— ஜோஸ்பர்

## இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் அடுத்து வரும் யுத்தங்களில் பெருமளவு உயிரிழப்புகளும் சொத்தழிப்புக்களும் ஏற்படுமென்றும் அப்பத்திரிகைகள் அரசை எச்சரித்துள்ளன. இ

## காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பக்க சார்பற்ற ஒரு அமைப்பு என்ற வகையில் இராணுவ தளம் ஒன்றை நோக்கிச் செல்லும் கப்பல்களுக்கு தங்களது அமைப்பு பாதுகாப்பு வழங்குச் செல்ல முடியாதென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தலைவர் திரு. மார்க்கோ ஆல்டர் பி. பி. ஸி. க்கு தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புல பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப்பொருட்களை இறக்கி வந்த ,லங்கா முடித்த' கப்பலிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் கடற்படையினர் வற்புறுத்தியதையடுத்தே ஐ. சி. ஆர். சி. மேற்படி முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப் படுகி[illegible]து. சி

# புலிகளின் ஏவுகணை செலுத்தியை நோக்கி சுப்பசொனிக் தாக்கியதாம்

(கொழும்பு)

புக்காராவை புலிகள் ஏவுகணையால் சுட்டு வீழ்த்திய போது புலிகள் எங்கிருந்து ஏவுகணைத் தாக்குதலை நடாத்தினார்களோ அந்த இடத்தில் சுப்பசொனிக் விமானம் தாக்குதலை நடாத்தியதாக விமானப்படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

புக்காரா சுடப்பட்டபோது அப்பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்றில் பறந்துகொண்டிருந்த விமானப் படையின் தாக்குதல்பிரிவு இயக்குனர் ஏவுகணை எங்கிருந்து வந்தது என்பதை கண்டாராம்.

உடனடியாக சுப்பசொனிக் விமானம் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டு மேற்படி விமானப்படை அதிகாரியின் வழிகாட்டலின்படி ஏவுகணை செலுத்தி இருந்த பகுதி சுப்பசொனிக்கின் தாக்குதலுக்குளாக்கப்பட்டதாகவும் இதனுல் புலிகளின் ஏவுகணை செலுத்தி சேதமடைந்ததா என்பது குறித்து தெரியவில்லை எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (சி)

# அடுத்த படை நடவடிக்கை மேஜர் ஜெனரல் செனிவிரட்ணவிடம்

(கொழும்பு)

வடக்கில் நடைபெறவுள்ள அடுத்த இராணுவ நடவடிக்கைக்கான பொறுப்பு மேஜர் ஜெனரல் செனிவிரட்ணவிடம் ஒப்படைக்கப்படலாம்மென்று செய்திகள் தெரிவிக்கின்றன

''முன்னேக்கிப் பாய்ச்சல்'' இராணுவ நடவடிக்கைக்கு முதலில் மேஜர் ஜெனரல் செனிவிரட்ணவ நியமிக்கப்பட்டார். முப்பதாயிரம் படையினர் இல்லாமல் இந்த இராணுவ நடவடிக்கையை பொறுப்பேற்க மாட்டேன் என்று அவர் கூறியதைத் தொடர்ந்தே மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்தையிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கை வெற்றி பெற்றிருந்தால் இராணுவத்தளபதிலெட்டினட் ஜெனரல் ஜெரி டி சில்வாவிற்கு பதிலாக மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்தையே இராணுவ தளபதி ஆக நியமிக்கப்பட்டிருப்பார்.

இந்த இராணுவ நடவடிக்கையின், இலக்கு குறிவறியதால் மேஜர் ஜெனரல் செனிவிரட்ணவின் கையேதற்போது பாதுகாப்பு அமைச்சில் ஓங்கியிருப்பதாகவும், கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-சி


## அறிவித்தல்

இன்று 27-07-95 வியாழக்கிழமை ஆடி அமாவாசை வர்த்தக விடுமுறை தினமாக இருப்பதால், அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களின் வசதிகள் கருதி வருகிற சனி, ஞாயிற்றுக்கிழமை வணிக நிலையங்கள் திறந்திருக்கலாம். ஊழியர்கள் தாமாக விரும்பி வேலைக்கு வரும் பட்சத்தில் மேலதிக வேதனம் வழங்கப்படல் வேண்டும்.

யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம்.

(ஏ 5151)

# முல்லை, வன்னி, கிளிநொச்சியிலும் பாரிய இராணுவ நடவடிக்கை?

(கொழும்பு)

முல்லைத்தீவு வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென இராணுவ தலைமைப்பீடம் வற்புறுத்தியுள்ளது

அண்மையில் கூடிய இராணுவ உயர் தளபதிகள் கொடை பாதுகாப்பு மாநாட்டில் இது வற்புறுத்தப்பட்டதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கை போலவு மேறபடி மூன்று மாவட்டங்களிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்குமென இராணுவ தளபதிகள் அரசை வற்புறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து விரைவில் இறுதி முடிவெடுக்கப்படுமென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சி

# யாழ். நகர் நோக்கி திடீர் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணு முகாமின் இருந்து இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12 45 மணியளவில் யாழ் நகரை நோக்கி பரவலான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ராணுவத்தினர்மேற்கொண்ட ஷெல்கள் நகரின் பாதுகாப்பு வலய எல்லைக்கு சற்று அப்பால் வீழ்ந்து வெடித்தன. கோட்டைப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினை அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த இராசையா கண்ணன் (வயது 18 மரணமடைந்தார்.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கு. சிவப்பிரகாசம் என்பவரின் வர்த்தக நிலையத்திற்குமேல வீழ்ந்ததினால் வர்த்தக நிலையத்தின் பின்புறம் சேதமடைந்துள்ளது.

மற்றொரு ஷெல் வண்ணார் பண்ணை சிவாலகத்திற்கு அருகில் உள்ள கே வைரமுத்து என்பவரின் வீட்டு முற்றத்தில் வீழ்ந்தபோதும் அது வெடிக்கவில்லை.

இதேவேளை காரைநகர் பகுதியிலிருந்து நேற்று அதிகாலை 2 மணிக்கு பொன்னாலை குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலை, திருவடிநிலை, வறுத்தோலை, காட்டுப்புலம், சுழிபுரம் மேற்கு பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன

170 90 59 சி

# தினமும் 135 லொறிகள் வடக்கே வர படையினர் அனுமதி மறுப்பு

[வவுனியா]

வடபகுதிக்குள் உணவுப் பொருட்களுடன் தினமும் செல்ல 150 லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் 135 லொறிகளை அனுமதிக்க படையினர் மறுத்து வருகின்றனர்.

தற்போது தினமும் 15 லொறிகளில் மட்டுமே வடபகுதிக்கு பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றன. ஏனைய லொறிகளை வடபகுதிக்குள் செல்ல தாண்டிக்குளத்தில் படையினர் அனுமதிப்பதில்லை

இதேவேளை தடைசெய்யப் பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்வதாகக் கூறி தினமும் 30 முதல் 40 லொறிச் சாரதிகள் கைது செய்யப்படுவதாக படையினர் கூறியுள்ளனர்.

எனினும் தற்போதைய நிலையில் வவுனியாவில் வைத்து படையினரும் பொருளாதாரத் தடையை விதித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சி

# அனுமதி அட்டைகள் 30ம் திகதி விநியோகம்

(குருநகர்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்குரிய பாடசாலை மண்டபங்களை ஒழுங்குபடுத்த சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறு சகல கல்விக் கோட்டப் பிரதி கல்விப் பணிப்பாளர்களுக்கும் யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் பணித்துள்ளார்

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை உடனடியாக யாழ். கல்வி வலயம் 1ல் பெற்று அவற்றை 30-ம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு மாணவர்களுக்கு விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறும் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை பரீட்சைச குழுவினர்க்கான அறிவுறுத்தல் கூட்டம் 29 ம் திகதி சனிக்கிழமை பி. ப. 2 மணிக்கு யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. பாடசாலையில் நடைபெறவுள்ளது -95-சி.

# ஏவுகணை எவ்வாறு இயக்குவது போதகர்கென்னத்திடம்பொலிஸார்கேள்வி

(கொழும்பு)

ஏவுகணை ஒன்றை எவ்வாறு இலக்கு வைத்து ஏவுவது என்று தன்னிடம் பொலிசார் கேட்டதாக தடுப்புக்காவலில் தற்போது வைக்கப்பட்டுள்ள அமெரிக்க கிறிஸ்தவ பணியாளரான கெனதமுல்டர் தெரிவித்துள்ளார்.

பொலிசார் தன்னை கேள்விகள் கேட்டு துருவித் துருவி ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கு இராணுவப் பொருட்களை எடுத்துச் செல்ல முற்பட்டார் எனக் கூறி கடந்த சனிக்கிழமை தாண்டிக்குளம் இராணுவத்தினரால் இவர் கைதுசெய்யப்பட்டார்,

இதேவேளை கடந்த திங்கட்கிழமை கெனத்மூல்டர் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இவர் இதுவரையில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படாமல் தொடர்ந்தும் தடுப்புக்காவலிலேயே வைக்கப்பட்டுள்ளார்-

க-சி

# வவுனியா ஆஸ்பத்திரிக்கு மருந்து விநியோகம் நிறுத்தம்

(கொழும்பு)

வவுனியா ஆதாரவைத்திய சாலைக்கு கொழும்பிலிருந்து மருந்துகள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது,

இதனால் வவுனியாவில் வைத்திய சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரிக்கான மருந்து விநியோகம் நிறுத்தப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை,

இதேவேளை கிழக்கு மாகாணத்திலும் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ள பகுதிகளுக்கு உணவுப் பொருட்களையும், மருந்து வகைகளையும் அனுப்ப அரசு மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# ஆற்றில் மிதக்கும் சடலங்கள்; முன்னாள் அமைச்சருக்கு தொடர்பு

(கொழும்பு)

தெற்கில் ஆறுகளில் மிதக்கும் மர்மச் சடலங்களின் கொலைக்கும் முன்னாள் ஐ தே க அமைச்சர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாக பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து அந்தமுன்னாள் அமைச்சர் பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இது பற்றி அந்த அமைச்சரிடம் விசாரணை நடாத்திய பொலிசார் அவருக்கும் இந்த மர்மச் சடலங்களுக்கும் தொடர்பில்லை எனக் கண்டதுடன் பொலிசாருக்குக்கிடைத்த அனுமதேயத் தகவலில் உண்மையில்லையென முடிவு செய்தனராம்.

இதேவேளை இந்த மர்மச் சடலங்கள்குறித்து தகவல்கள் வழங்க தாம் தயாராயிருப்பதாக தமிழ் எம். பி ஒருவர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளார். இதையடுத்து இது குறித்து அவரிடமிருந்து தகவல்கள் பெறப்படவுள்ளதாகவும் அவரதுபெயர் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிடப்படமாட்டாதெனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஹேபை ஜெயசூரியா தெரிவித்துள்ளார். -கி

# ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் கணவர் பொலிஸாரால் கைது

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலாவின் கணவரான எம். நடராஜன் சென்னையில் நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டார்

பொலிஸ் உளவுப் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கியதாக குற்றஞ் சாட்டி தொடரப்பட்ட வழக்கினையடுத்தே இவர் கைது செய்யப்பட்டதாக சென்னை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

திரு. நடராஜனும் அவரது பத்திரிகையான 'தமிழரசி' யின் பணியாளர்களான ஐந்து பேரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.-க-சி

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாளை 28ம் திகதி நடைபெறவிருந்த உறங்காத கண்மணிகள் வீடியோ திரைப்பட வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. கி

## நீர்கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுக்குள் இருந்து எரிந்த நிலையில் ஏழு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன இவற்றுடன் சேர்த்து தெற்கில் இதுவரை 40 மர்மச் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சி

## லஞ்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம்கொண்டுசெல்ல அனுமதித்ததற்காக இந்த இராணுவ தளபதியை பொலிசார் கைது செய்துள்ளனர், வியாபாரியையும் மோசடி செய்த குற்றத்திற்காகபொலிசார் கைது செய்துள்ளனராம். -சி

## அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தீர்வுத்திட்டம் மூலம் மத்திய அரசின் அதிகாரங்கள் கணிசமான அளவு குறைக்கப்பட்டு எட்டு மாகாணங்களுக்கும் அது பரவலாக பகிர்ந்தளிக்கப்படும். அந்தந்த மாகாணங்கள் தத்தமக்கேற்றவாறு சட்டவாக்கல் அதிகாரங்கள், நிறைவேற்று அதிகாரங்கள் என்பவற்றை இதன் மூலம் பெறமுடியும்.

மேலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதோடு இந்த இரண்டு மாகாணங்களிலும், சிங்களவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களும்முஸ்லிம்பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களும் அடுத்துள்ள சிங்கள பெரும்பான்மை மாகாண சபைகளுடன் இணைக்கப்படும்.

அரசியலமைப்பில் தேவையான திருத்தம், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை பெறல், சர்வஜன வாக்கெடுப்பு என்பவற்றுக்கு அமைவாகவே இத் திட்டம் வெளிவர இருக்கின்றது. தீ.சி

# யாழ். ரோட்டறிகழகத்திற்கு மூன்று முக்கிய 'பதவிகள்

(யாழ்ப்பாணம்)

1994- 1995 ஆம் ஆண்டில் அகில இலங்கையில் சிறந்த ரோட்டறிக் கழகமாகத்தெரிவு செய்யப்பட்ட யாழ். ரோட்டறிக் கழகத்தின் சேவையை கௌரவிக்கு ம்முகமாக இலங்கை ரோட்டறி வட்டத்தின் ஆளுனர் மூன்று முக்கிய பதவிகளை யாழ். ரோட்டறிக்கழகப் பிரதிநிதிகளுக்கு வழங்கியுள்ளார்.

1994- 1995 ஆம் ஆண்டின் யாழ். ரோட்டறிக் கழகத்தலைவர் ரோட்டேறியன் ஈ. சரவணபவன் ரோட்டறி ஆளுநரின்யாழ்ப்பாணம் கிளிநொச்சி பரந்தன் மட்டக்களப்பு பிரதேச அணிப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டின் செயலாளரும் நடப்பு வருட பதில் தலைவருமான ரோட்டேறியன் திரு. ரி. நந்தகுமார் பிரதேச ரோட்டறக்ட் இணைத்தலைவராகவும் ரோட்டேறியன் டாக்டர் ஸ்ரீ. இரட்ணகுமார் பிரதேச இன்ரக்ட் இணைத்தலைவராகவும் ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளனர். சி

# அரச காணிகளின் நிர்வாகம்

(யாழ்ப்பாணம்)

1995-03-10 ம் திகதி முதல் அரச காணிகளின் நிர்வாகத்தைத் தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பேற்றுள்ளதால் அதன் உரிமையாளர்கள் அவற்றை விற்கவோ, வாங்கவோ கூடாது எனவும் அவ்வாறான காணிகளை எவரும் கொள்வனவு செய்யக்கூடாதெனவும் தமிழீழ நிர்வாக சேவைப் பொதுப்பாளர் அறியத் தருகிறார். -சி

## க. பொ.த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை க பொ த உயர்தரபரீட்சை திட்டமிட்டவாறு யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் 31ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென்று யாழ் அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கான வினாத்தாள்கள் உட்பட சகல ஆவணங்களையும் குடாநாட்டுக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை க பொ த உயர் தர பரீட்சை திட்டமிட்டவாறு எதிர்வரும் 31ம் திகதி ஆரம்பமாகுமென்றும் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு சென்ற யாழ் கல்விவலயம் இரண்டின்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி நேற்று யாழ் கல்வி திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார். (சி-170-162)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.